பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 25 புதன்கிழமை 09.07.2025 கதிர் 242

இனி

இது ரகசியம் அல்ல!

எல்லா ஆளும்தரப்புக்களையும் போலஎன்பிபிஆளும்தரப்பும்ஆட்சிக்கு வரும் வரைக்கும் ஊடகங்களை கட்டியணைத்து உச்சிமுகர்ந்து கொண்டாடிவிட்டு, ஆட்சிக்கு ☞ 2

## டிஜிட்டல் சேவைகள் மீதான வரி இளம் தலைமுறை மீதான அடி

### எதிர்க் கட்சித் தலைவர் கருத்து

ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் டிஜிட்டல் சேவைகள் மீது ஆளும்தரப்பு 18% பெறுமதி சேர் வரியை விதித்துள்ளது. இது தொடர்பான அறிவித்தல் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. கிளவ்ட் கொமியுடிங் (Cloud Commuting) களஞ்சிய வசதிகள், கணினி சேவைகள், மென்பொருள் சேவை வழங்கல், இணைய அடிப்படையிலான மென்பொருட்கள் (Web-based applications), இலத்திரனியல் வர்த்தகம் (E-Commerce Services), டிஜிட்டல் சந்தைப்படுத்தல் போலவே விளம்பரப்படுத்தல், சமூக ஊடக சந்தைப்படுத்தல் (Social Media Marketing), டேட்டா என்கிறிப்சன் ☞ 3

## சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழி வழக்குத்தொடுநருக்கு அச்சுறுத்தல்?

செம்மணி விடயம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய அச்சுறுத்தல், குறித்த மயானத்தின் நிர்வாகசபை உறுப்பினரான கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செம்மணி பகுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மர்ம வாகனம் செம்மணியை நோட்டமிடுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. அந்த செய்திகள் முற்றும் முழுதாக உண்மை. அந்த மர்மவாகனமானது எனதுவீட்டுக்குஅருகாமையிலும்வந்திருந்தது. வழக்காளியான என்னை அச்சுறுத்துவதே இதன் நோக்கமாகும். ☞ 2

## இலங்கை மக்களின் பாதுகாப்பு டுபாயில் இலிருந்தே தீர்மானிப்பு

### சாமர சம்பத் எம்.பி. தெரிவிப்பு

பிரபாகரன் இருந்த இடத்தையே கண்டுபிடித்த இந்த நாட்டில். நீதிமன்றத்திற்குள் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தியை கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது ஏன் என்று புரியவில்லை, பொது மக்கள் பாதுகாப்பு டுபாயில் இருந்தே வழிநடத்தப்படுகிறது என புதிய ஜனநாயக முன்னணி உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார். ☞ 3

## கொலைச் சந்தேகநபர் கைது

ராகம படுவத்தை பகுதியில் ஜூலை 3 வியாழக்கிழமை இரவு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி பிரிவு குற்ற விசாரணைப் பிரிவினரால் ராகமபடுவத்தைபகுதியில் 08ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது சந்தேகநபரும் மற்றொருநபரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 9 கிலோ கிராம் 220 கிராம் ஹெராயின், 67 ☞ 3

# செம்மணியில் நாளாந்தம் உயர்கிறது எண்ணிக்கை

## நேற்றும் 4 எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம்

யாழ்ப்பாணம் செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இதுரை 56 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதில் 50 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனிதப்புதைகுழியின் இரண்டாம்கட்ட அகழ்வு பணிகள் 13ஆவது நாளாக யாழ்ப்பாண நீதிவான் ஆனந்தராஜாவின் முன்னிலையில் இன்றும் முன்னெடுக்கப்பட்டது.

அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வரும் இரண்டாவது அடையாளப்படுத்தப்பட்ட இடத்திலே மூன்று மனித என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவை இன்றைய தினம் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது நாளை குறித்த மூன்று எலும்புக்கூடுகளும் மீட்டெடுக் கப்படவுள்ளதாக சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்தார்.

முதலாம் இலக்கமிடப்பட்டுள்ள அகழ்வுப்பணி இடம்பெறும் இடத்தில் மனித உடைகள், சப்பாத்து என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன அவை இன்னும் ☞ 2

## அமெ. வரிப் பிரச்சினைக்கு எட்டிய தீர்வுதான் என்ன?

### ஹர்ஷ டி சில்வா எம்.பி. கேள்வி

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பரஸ்பர தீர்வை வரி பற்றி அமெரிக்காவுடன் பேசுகிறோம், பேசுகிறோம் என்று அமைச்சர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இதுவரையில் சாதகமான பதில் கிடைக்கவில்லை. பிரச்சினை உள்ளதை நாங்களும் அறிவோம், தீர்வையே கேட்கிறோம். ஆளும்தரப்பின்தாமதம்தொழிற்றுறையினருக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலத்திரனியல்வணிககட்டமைப்பில்தோற்றம் பெற்ற சிக்கல்களுக்கு தீர்வு கண்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிடுகிறார். அந்த தீர்வுகள் என்னவென்பதை ஆளும்தரப்பு தெளிவுப்படுத்தவேண்டும். நடைமுறைக்கு சாத்தியமற்ற வகையில் கருத்துக்களை முன்வைப்பதை ஆளும்தரப்பு தவிர்த்துக்கொள்ளவேண்டும். ☞ 3

## தவறு செய்தவர்கள் தப்பவே முடியாது

### பிரதி அமைச்சர் பிரதிப் சூளுரை

உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பான் தப்பு செய்தவன் தண்டனை பெறுவான் என்ற வகையில் தவறு செய்த எவரும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பிடமிருந்து ஒருபோதும் தப்ப முடியாது என பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார். ☞ 3

## கொள்கலன்கள் விடுவிப்பில் அரசியல் தலையீடு இல்லை

### விசாரணை அறிக்கையை நாடாளுமன்றில் விரைவில் சம்ர்ப்பிப்போம் என்கிறது ஆளும்தரப்பு

அரசியல் தலையீட்டுடன் 323 கொள்கலன்கள் விடுவிக்கப்படவில்லை. ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையை வெகுவிரைவில் சபைக்கு சமர்ப்பிப்போம் சமூக வலைத்தளங்களில் பரிமாற்றப்படும் அறிக்கையையே எதிர்க்கட்சியின் உறுப்பினர் சபைக்கு சமர்ப்பித்தார் என பொருளாதார ☞ 3

### 323 கொள்கலன் விடுவிப்பில்

## அமைச்சர் பிரதி அமைச்சரிடம் ஏன் இதுவரையில் விசாரணை இல்லை?

### நாமல் ராஜபக்ச கேள்வி

பரிசோதனையின்றி 323 கொள்கலன்கள் விடுவிடுக்கப்பட்டமை முறைகேடானது என்று அரசுத் தலைவர் நியமித்த குழு அறிக்கை சமர்ப்பித்ததை தொடர்ந்து ஆளும்தரப்பின் தவறு அரச அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது. துறைமுக அபிவிருத்தி அமைச்சர்மற்றும்பிரதிஅமைச்சர்ஆகியோரை ஏன் இதுவரையில் விசாரணைக்கு ☞ 2

## அமெரிக்காவுடன் வரி குறித்து வெகு விரைவில் ஒப்பந்தம்

### பிரதி அமைச்சர் அனில் தெரிவிப்பு

அமெரிக்கா உலகநாடுகளுக்கு விதித்துள்ள பரஸ்பர தீர்வை வரி பற்றி மாறுப்பட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. இந்த வரி இலங்கைக்கு மாத்திரம் விதிக்கப்படவில்லை என்பதை எதிர்க்கட்சிகள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தீர்வை வரி தொடர்பில் அமெரிக்காவுடன் வெகுவிரைவில் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். சாதகமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என பொருளாதார திட்டமிடல் பிரதி ☞ 3

## இனங்கள் இடையிலான வெறுப்பரசியலை வேரோடு ஒழித்தவர் அரசுத் தலைவர் அநுர

### கர்தினால் மல்க்கம் ரஞ்சித் பெருமிதம்

நாட்டில் பல்வேறு இனக்குழுக்களிடையே வெறுப்பை விதைத்த 75 ஆண்டுகால அரசியல் கலாசாரத்தை வேரோடு ஒழிக்க அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவினால் முடிந்துள்ளதாகத் தெரிவித்த கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, நாட்டை ஒரு வளமான தேசத்தை நோக்கி இட்டுச் செல்வதில் ஒரு புதிய அணுகுமுறையின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மேலும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் உண்மைகளை ☞ 3

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வந்ததும் அதே ஊடகங்களைத் தமக்குத் தொந்தரவுதரும்தரப்பாகப்பார்த்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முயற்சிக்கிறது.

இலங்கையில் ஊடக சுதந்திரத்திற்காக, ஊடகங்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக எவ்வளவோ போராடவேண்டி இருக்கின்றது. இன்றும் ஊடகவியலாளர்கள் தமது கருத்துக்களை வெளிப்படையாக, சுதந்திரகமாகச் சொல்லிவிடக்கூடிய நிலமை முழுமையாக உள்ளது என்று சொல்ல முடியாது. உலக ஊடகச் சுட்டியில் இலங்கை இன்னும் வெகுதூரம் முன்னேறவேண்டி இருக்கின்றது.

இந்தநிலையில்ஊடகவியலாளர்களுக்கான நெறிமுறைகளை (கோட் ஒஃவ் எதிக்ஸ்) உருவாக்கும் பணிகளைத் தனது அமைச்சு மேற்கொண்டிருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் நளிந்த நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வின் போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், பத்திரிகைத்துறையில் நெறிமுறை தரங்களை நிலைநிறுத்துவதற்குத் தமது ஆளும்தரப்பு உறுதிபூண்டுள்ளது என்றும், பத்திரிகையாளர்களுக்கான முறையான நெறிமுறைகளின் தொகுப்பு ஒன்றை உருவாக்கும் செயல்முறையை ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

'பத்திரிகையாளர்களுக்கான நெறிமுறைகளைப்பராமரிப்பதில்ஆளும்தரப்பு கவனம் செலுத்துகிறது, எங்கள் அமைச்சு ஏற்கனவே அத்தகைய நெறிமுறைகளை உருவாக்கத் தொடங்கியுள்ளது' என்று அமைச்சர் கூறினார்.

பத்திரிகையாளர்களுக்கான நெறிமுறைகளை ஏற்படுத்துவது ஆளும்தரப்பின் கடமையல்ல. அது ஊடகர்களைக் கட்டுப்படுத்த முயலும் ஆளும்தரப்பின் செயற்பாடு மட்டுமே. இலங்கை பத்திரிகைகளின் ஆசிரியர்கள் அவை ஏற்கனவே ஊடகர்களுக்கான நெறிமுறைகளை (கோட் ஒஃவ் எதிக்ஸ்) உருவாக்கி வைத்துள்ளது. அனைத்து ஊடக நிறுவனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நெறிமுறை அது. அதுவும்போக அந்தந்த ஊடக நிறுவனங்களும்கூட தமக்குத் தமக்கென நெறிமுறைகளை உருவாக்கி வைத்துள்ளனன.இந்தநிலையில்ஆளும்தரப்பு ஒரு ஊடக நெறிமுறையை உருவாக்குவது தேவையற்றது.

ஒவ்வொருமுறை ஆட்சிக்கும் வரும் தரப்புக்களும் இவ்வாறான நெறிமுறைகளை உருவாக்கி ஊடகவியலாளர்களை எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்றே பார்க்கின்றன. கடந்த ஆட்சிக் காலங்களிலும் இது போன்ற பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் கடுமையான எதிர்ப்புக்கள் காட்டப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக அந்த ஆட்சியாளர்களால் தமது எண்ணத்தை நிறைவேற்ற முடிந்ததில்லை. இப்போது என்பிபியும் அதே பாதையில் பயணிக்க முற்படுகின்றது. அது ஆட்சியைப் பிடிப்பதற்கும், அதிகாரத்திற்கு வருவதற்கும் ஊடகவிலாளர்கள்தான் மிக முக்கிய காரணம் என்பதை அது மறந்துவிட்டது போல் தோன்றுகின்றது.

குண்டுச்சட்டிக்குள்தான் குதிரையோட்டிக் கொண்டிருக்கின்றோம் போல் உள்ளது..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## செம்மணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகழ்ந்தெடுக்கப்படவில்லை.

நேற்று பாதிக்கப்பட்டோர் சார்பில் சம்பவ இடத்திற்கு வருகைதந்த சட்டத்தரணி சுகாஷ் சர்வதேச ரீதியிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன் குறித்த மனித எச்சங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்த முறைப்பாட்டாளர் கிருபாகரனும் சம்பவ இடத்திற்கு வந்து தனக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவது தொடர்பிலும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

## சிந்துப்பாத்தி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கு தொடர்பாக 1995 - 2000 வரையான காலப்பகுதியில் இங்கே கடுமையான செய்தி தணிக்கைகள் இருந்த நிலையில்நீதிமன்றசெயற்பாடுகளும்பொலிஸ் செயல்பாடுகளும் இல்லாது நிர்வாக ரீதியான செயல்பாடுகள் அனைத்தும் இராணுவத்தின் வசம் இருந்ததால் மக்கள் தாமாக முன்வந்து எந்த சாட்சியங்களையும் பதியவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் நான் இந்த விடயத்தை இன்று கையில் எடுத்ததால் அரியாலைபகுதியில் இருக்கின்றபாதிக்கப்பட்ட மக்கள் தமது சாட்சியங்களை எனக்கு தந்து கொண்டிருக்கின்ற நிலையிலே இந்தச் சாட்சியங்களை அச்சுறுத்துகின்ற அல்லது இந்த சாட்சியங்கள் சாட்சி கூற வருவதை தடுப்பதற்காக என்னை அச்சுறுத்தப் பார்க்கிறார்கள்.

கிருஷாந்தி கொலைவழக்கில் முதலாவது குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ச 1998ஆம் ஆண்டு வழங்கிய புதைகுழிகள் தொடர்பான அறிக்கையிலே, பதினைந்தாவது புதைக்குழியாக குறிப்பிடப்பட்ட ஏ-9 வீதி, பொன்னம்பலம் சந்திக்கு அருகாமையில் இருக்கின்ற இராணுவ முகாமுக்கு அருகில் இருக்கின்ற கிணற்றிலிருந்து அகழ்வு இடம் பெற்றது. அதற்குப் பின்னால் இப்போதும் இராணுவ முகாம் இருக்கின்றது. அந்த இராணுவ முகாம் அமைந்துள்ள தனியார் காணிக்குள்தான் அந்த மர்ம வாகனம் சென்றது. இதனை நான் அவதானித்தேன்.

நான் வசிக்கின்ற வீட்டுக்கான வீதியானது எனது வீட்டுடனேயே முடிவடைகின்றது. ஆகையால் வேறொரு வாகனம் அந்த ஒழுங்கைக்கு வருவதற்கான அவசியம் இல்லை. இரண்டு வாகனங்கள் இவ்வாறு வந்திருந்தன. இதனை நேரில் கண்ட ஒருவர் எனக்கு தெரிவித்திருக்கின்றார்.

அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட எவ்வாறான செயற்பாடுகள் நடந்தாலும் இந்த வழக்கில் நான் உறுதியாக இருக்கின்றேன். மக்களும் உறுதியாக தமது சாட்சியங்களைத் தருகின்றார்கள். இதன்மூலம் பல உண்மைகள் வெளிவருகின்றன. அதனைநாங்கள்நீதிமன்ற செயற்பாட்டுக்கு சமர்ப்பித்து தொடர்ந்து தமிழ் மக்களுக்கான நீதிக்கான அனைத்து செயல்பாடுகளையும் முன்னெடுப்பேன் என்றார்.

## அமைச்சர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்படுத்தவில்லை. கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் என்னவென்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (8) நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

75 ஆண்டுகால ஆட்சியியலை விமர்சித்துதான் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. கடந்த 16 ஆண்டுகளாக உப்பு இறக்குமதி செய்யப்படவில்லை என்பதை ஆளும்தரப்பு விளங்கிக் கொள்ள வேண்டும். மோசடி செய்வதற்காக தான் அத்தியாவசிய உணவு பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகிறது என்று கடந்த காலங்களில் குறிப்பிட்டீர்கள்.

இன்று அரிசி, தேங்காய், உப்பு என்று அத்தியாவசிய பொருட்கள் அனைத் தும் இறக்குமதி செய்யப்படுகிறது. தாங்கள் குறிப்பிட்டதை போன்று மோசடி செய் வதற்காகவா அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகிறது என்று நாங்கள் கேட்கிறோம்.

அரச நிர்வாகத்தில் இடம்பெறும் தவறுகள் மற்றும் குறைகளை அரச அதிகாரிகள் மீது சுமத்தி விட்டு தப்பித்துக் கொள்ளும் புதிய கலாச்சாரத்தை இந்த ஆளும்தரப்பு கடைப்பிடிக்கிறது.. 323 கொள்கலன்கள் விடுவிப்பு விவகாரத்திலும் இந்த பிரச்சினை தோற்றம் பெற்றது. பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களில் என்னவிருந்ததுஎன்பதுஎவருக்கும்தெரியாது.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் என்னவிருந்தது என்பதை அறிவோம், அந்த கொள்கலன்கள் எங்குள்ளது என்று கடந்த காலங்களில் இந்த அரசாங்கத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அரசுத் தலைவர் யால் நியமிக்கப்பட்ட குழு இந்த கொள்கலன்கள் விடுவிப்பு தவறு என்று அறிக்கை சமர்ப்பித்ததும், அரச அதிகாரிகள் மீது பழி சுமத்துகிறார்கள்.

ஆளும்தரப்பின் தவறுகளுக்கு அரச அதிகாரிகள் பொறுப்பேற்கும் நிலைமை காணப்படுகிறது. அரசுத் தலைவர் பொதுமன்னிப்பு விவகாரத்திலும் இவ்வாறான நிலைமையே காணப்படுகிறது. அரசுத் தலைவர் யின் பொதுமன்னிப்பின் பிரகாரமே குறித்த கைது விடுவிக்கப்பட்டாரே தவிர, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் பொதுமன்னிப்பில்அல்லஎன்பதைகுறிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.அரசுத் தலைவர் யின் பொதுமன்னிப்பு விவகாரத்தில் அரசுத் தலைவர் யின் செயலாளரோ, நீதியமைச்சரோ அல்லது நீதியமைச்சின் செயலாளரோ பொறுப்புக்கூறவில்லை. சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சிறையில் உள்ளார்.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் பல முறைப்பாடளித்துள்ளதாககுறிப்பிட்டீர்கள்.அந்த விசாரணைகளின் முன்னேற்றம் என்ன ? துறைமுக அமைச்சர் மற்றும் துறைமுக பிரதி அமைச்சர் இந்த கொள்கலன்கள் விடுவிப்பு பற்றி தமக்கு தெரியும் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள்.ஆனால் இதுவரையில் அவர்கள்விசாரணைக்குட்படுத்தப்படவில்லை. ஆனால் இவ்விடயம் பற்றி நாடாளுமன்றத்தில் பேசிய தயாசிறி ஜயசேகர மற்றும் அர்ச்சுனா ஆகியோர் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு

தொடர்ச்சி 5ம் பக்கம்...

# சமுத்திரப் பாதுகாப்பில் ஈடுபட கடற்படைக்கு கிட்டிய அனுமதி

சமுத்திரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை கடற்படைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றையதினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேசகடற்போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வணிகக் கப்பல்களுக்கு செங்கடல் மற்றும் ஈடின் வளைகுடா உள்ளிட்ட சோமாலியா சமுத்திர வலயத்தில் கடல் கொள்ளையர்களின் செயற்பாடுகளால் சர்வதேச சமுத்திரவியல் அமைப்பு, குறித்த கடற் பிராந்தியங்கள் அதிக ஆபத்துக் கொண்ட வலயங்களாக 2010 ஆம் ஆண்டிலிருந்து பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த அச்சுறுத்தலுக்குத் தீர்வாக அதிக ஆபத்துக் கொண்ட வலயங்களுக்குள் உள்நுழைகின்ற வணிகக் கப்பல்களால் வெளிநாட்டு தனியார் சமுத்திரப் பாதுகாப்புக் கம்பனிகள் மூலம் ஆயுதங்கள் தாங்கிய சமுத்திரப் பாதுகாவலர்களின் சேவைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் குறித்த வலயங்கள் அதிக ஆபத்துக் கொண்ட வலயத்தை நீக்கி சர்வதேச சமுத்திரப் பாதுகாப்பு அமைப்பு பிரகடனப்படுத்தி இருப்பினும், வணிகக் கப்பல்கள் தொடர்ந்து தனியார் சமுத்திரப் பாதுகாப்பு கம்பனிகளின் சேவைகளை தொடர்ந்தும் பெற்றுக் கொள்கின்றன.

குறித்த கடல் வலயங்களுக்கு உள்நுழைகின்ற கப்பல்களில் ஆயுதங்கள் தாங்கிய சமுத்திரப் பாதுகாலர்களை ஏற்றுவதற்கும், வெளியேறுகின்ற கப்பல்களில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட ஆயுதம்தாங்கிய சமுத்திரப் பாதுகாவலர்களை இறக்குவதற்கும், பிரதானமாக காலி மற்றும் கொழும்புத்துறைமுகங்கள்பயன்படுத்தப்பட்டு வருவதுடன், ஒரு சில சந்தர்ப்பங்களில் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்களிலும் இவ்வாறாக சமுத்திர பாதுகாப்புநடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த கருத்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தேசியப் பாதுகாப்பு தொடர்பானமுழுமையானபொறுப்புஇலங்கை கடற்படைக்குஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகவே, சமுத்திரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி இலங்கையை கடற் படையிடமுள்ள அறிவு மற்றும்அனுபவங்களைக்கருத்தில்கொண்டு, சமுத்திரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை சுயாதீனமாக மேற்கொள்வதற்கு இலங்கை கடற்படைக்கு அனுமதி வழங்குவது பொருத்தமானதெனக்கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பின் கீழ் சமுத்திரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கை கடற்படை மூலம் மேற்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சராக அரசுத் தலைவர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

# மதுவரி ஆணையாளர் பதவிக்கு ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி

மதுவரி ஆணையாளர் நாயகம் பதவிக்கு கடற்படையின் ஓய்வுபெற்ற கமாண்டர் பேமரத்னநியமிக்கப்படுவதற்குஅமைச்சரவை அனுமதிஅளித்துள்ளதுஎன்றுஅமைச்சரவைப் பேச்சாளர் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றையதினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

மதுவரி ஆணையாளர் நாயகம் பதவியில் சேவையாற்றும் இலங்கை உள்நாட்டு இறைவரி சேவையின் விசேட தர அலுவலர் திரு. யு.எல்.உதயகுமார பெரேரா அவர்களுக்கு 2025-07-10 திகதியில் 60 வயது பூர்த்தியடைவதால் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

அதற்கமைய, வெற்றிடமாகும் மதுவரி ஆணையாளர் நாயகம் பதவிக்கு இலங்கை கடற்படையின் ஓய்வுபெற்ற கொமடோர் எம்.பீ.என்.ஏ. பேமரத்னவை நியமிப்பதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக அரசுத் தலைவர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது என்றார்.

# பொலிஸ் துறையில் 28,000 வெற்றிடங்கள்

## 5000 பேரை மட்டும் சேர்க்கவே நடவடிக்கை

பொலிஸ் சேவையில் 28000 ஆயிரம் வரையிலானவெற்றிடங்கள்காணப்படுகின்றன. முதற்கட்டமாக 5000 பேரை சேவையில் இணைத்துக் கொள்வதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பொலிஸ் இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது வாய்மூல விடைக்கான வேளையில் ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நஜித் இந்திக முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ்சேவையில்ஆளணிபற்றாக்குறை காணப்படுவதை ஏற்றுக்கொள்கிறேன். இன்றளவில் மாத்திரம் பொலிஸ் சேவையில் சுமார் 28 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

முதற்கட்டமாக 5000 பேரை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. இதற்கமைய இந்த ஆட்சேர்ப்புக்கான வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய முதற்கட்டமாக உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் பரிசோதகர் ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு இடம்பெறும்.5000 பேரை சேவையில் இணைத்துக்கொள்வதற்கானநடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பொலிஸ்சேவையில்பதவிஉயர்வுமற்றும் இடமாற்றம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. சிறந்த முறையிலான வழிமுறைகளுக்கு அமைவாகவே பதவி உயர்வு வழங்கப்படும். கடந்த காலங்களில் இடமாற்றம் மற்றும் பதவி உயர்வின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுப்போம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## உ செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்பட்டார்கள்.

கொள்கலன்கள்விடுவிப்புமுறைகேடானது என்று அரசுத் தலைவர் யால் நியமிக்கப்பட்ட குழு அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில், அடுக்கத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் ஆளும்தரப்பு அமைதி காக்கிறது. அனைத்து தவறுகளையும் அரச அதிகாரிகள்மீது சுமத்தினால் அரசகட்டமைப்பு முழுமையான வீழ்ச்சியடையும் என்றார்.

## அமெரிக்காவுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சந்தையில் திட்டமிட்ட வகையில் உப்பு தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஒரு தரப்பினர் மேற்கொண்ட முயற்சிகளை தோற்கடித்துள்ளோம். போதுமான அளவு உப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை சிறந்த முறையில் செயற்படுத்தியுள்ளோம்.

பொருளாதார மீட்சிக்கான சிறந்த திட்டங்களை செயற்படுத்தி பொருளாதார ஸ்திரப்படுத்தலை உறுதிப்படுத்தியுள்ள நிலையில் ஒரு தரப்பினர் வேண்டுமென்றே பொருளாதாரத்தை பலவீனப்படுத்தும் வகையில் தவறான கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள்.

அமெரிக்கா உலகநாடுகளுக்குவிதித்துள்ள பரஸ்பர தீர்வை வரி பற்றி மாறுப்பட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. இந்த வரி இலங்கைக்கு மாத்திரம் விதிக்கப்படவில்லை என்பதை எதிர்க்கட்சிகள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் அமெரிக்காவின் வர்த்தக பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். இந்த பேச்சுவார்த்தை குறித்து அமெரிக்காவுடன் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை இலங்கைக்கு சாதகமானதாக அமையும்.

தீர்வை வரி திருத்தம் தொடர்பில் அமெரிக்கா 14 நாடுகளின் பெயர் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்தநாடுகளுக்குஎதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி வரை மாத்திரமே நிவாரணமளிக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகள் அமெரிக்காவுடன் இருதரப்பு ஒப்பந்தங்களை கைச்சாத்திடவில்லை.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரி கொள்கைகளே தற்போது அமுல்படுத் தப்படுகின்றன. புதிதாக எவ்வித வரிகளும் தற்போது அமுல்படுத்தப்படவில்லை. மக்களை தவறாக வழிநடத்தும் கருத்துக்களை குறிப்பிடுவதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## அமெ. வரிப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகன இறக்குமதியின்போது மூன்றாம் தரப்பு நாடுகளில் இருந்து கடன் பற்று பத்திரத்தை விநியோகித்து வாகனங்கள் இறக்குமதிசெய்யப்பட்டன. 2013ஆம்ஆண்டு முதல் இந்த முறைமை செயற்படுத்தப்பட்டது. தற்போது இந்த மூன்றாம் தரப்பு நாடுகள் முறைமை சட்டவிரோதமானது என்று குறிப்பிட்டுக் கொண்டு இறக்குமதி செய்த வாகனங்களை மீள் ஏற்றுமதி செய்வதற்கு ஆளும்தரப்பு அவதானம் செலுத்தியுள்ளது. இது நடைமுறையில் மாறுபட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

ஏற்றுமதி சேவைகளுக்கும், சர்வதேச நிறுவனங்களின் தேசிய சேவைகளுக்கும் புதிதாக வரி அறவிடப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. இதனால் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தான் பாதிக்கப்படுவார்கள் என்பதை ஆளும்தரப்பு விளங்கிக் கொள்ள வேண்டும்.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பரஸ்பர தீர்வை வரி பற்றி அமெரிக்காவுடன் பேசுகிறோம், பேசுகிறோம் என்று அமைச்சர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இதுவரையில் சாதகமான பதில் கிடைக்கவில்லை. பிரச்சினை உள்ளதை நாங்களும் அறிவோம். தீர்வையே கேட்கிறோம். ஆளும்தரப்பின் தாமதம் தொழிற்றுறையினருக்கே பாதிப்பை ஏற்படுத்தும்.

டிஜிட்டல் பொருளாதாரம் பற்றி பேசப்படுகிறது. ஆனால் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் டிஜிட்டல் பொருளாதாரத்துக்கும் வரி அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. வரி கொள்கையை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்பட்டால் எவ்வாறு டிஜிட்டல் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும் என்றார்.

## கொள்கலன்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின் போது 323 கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஜனவரி மாதம் சுங்கத்தில் இருந்து கொள்கலன்களை விடுவிக்கும்போது ஏற்பட்ட நெரிசலுக்கு தீர்வு காண்பதற்கு சுங்கத் திணைக்களத்துக்கு தேவையான வசதிகள் நிதியமைச்சினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. சுயாதீனமான முறையில் தீர்மானங்கள் எடுப்பதற்கு முழுமையான அதிகாரமளிக்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் பரிசோதனைகள் ஏதுமின்றி சுங்கத்திலிருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டினார்கள். இவ்விடயத்தின் உண்மையை ஆராய்வதற்கு 2025.01.30 ஆம் திகதியன்று ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய நிதியமைச்சின் செயலாளர் ஐந்து உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் குழு ஒன்றை நியமித்தார்.

அரசியல் தலையீட்டுடன் இந்த கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டை ஏற்கமுடியாது. இந்தக் கொள்கலன்கள் விடுவிப்பில் ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றிருக்குமாயின் அதற்குரிய நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்வோம்.

ஜனாதிபதியின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு வெகுவிரைவில் சமர்ப்பிப்போம். சமூக வலைத்தளங்களில் பரிமாற்றப்படும் அறிக்கையின் பதிப்பினையே எதிர்க்கட்சியினர் உறுப்பினர் சபைக்கு சமர்ப்பித்தார் என்றார்.

## கொலைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிலோ கிராம் 520 கிராம் கேரள கஞ்சா, 02 துணை இயந்திர துப்பாக்கிகள், 10 9 மிமீ உயிருள்ள வெடிமருந்துகள், ஒரு வாள், விமானப்படை சீருடைகள், 4 மொபைல் போன்கள், ஒரு மடிக்கணினி மற்றும் 4 தராசுகள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிளும் அப்போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டமையும் தெரிவிக்கப்படுகிறது.

## இனங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிக்கொணருவதாக அரசுத் தலைவர் வழங்கிய வாக்குறுதியை விரைவாக நிறைவேற்றுமாறும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இதன்போது அரசுத் தலைவர் யிடம் கோரிக்கையும் விடுத்தார்.

கர்தினால் மல்க்கம் ரஞ்சித்தின் குருத்துவப் பணிவாழ்வின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கொழும்பு பேராயர் இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போது விசேட உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய கர்தினால் மேலும் தெரிவித்ததாவது:

75 வருட காலமாக இருந்த சர்வாதிகாரத்துக்கு இடமளித்த அரசியல் தீவிரவாதிகளை சமூகத்தில் இருந்து ஒடுக்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காரணம் இந்த நாட்டில் பல சந்தர்ப்பங்களில் மனித உரிமைகள் மீறப்பட்டன. ஊடகவியலாளர்கள், விமர்சகர்கள் என இந்த நாட்டை நேசித்தவர்கள் காணாம லாக்கப்பட்டவர்கள். பலர் அழிக்கப்பட்டார்கள். நாட்டில் ஊழலை தோற்றுவித்தார்கள். சர்வாதிகார அரசியலமைப்பை உருவாக்கினார்கள்.

நாட்டில்உள்ளபல்வேறுஇனத்தவர்களுக்கு இடையில் இன, மத பேதங்களை உருவாக்கி 30 வருடங்களாக நாட்டை அழிவுக்கு உட்படுத்தினார்கள். யுத்தத்துக்கு வழி வகுத்தார்கள். எனினும் தற்போது இந்த அரசியல் தீவிரவாதிகளை சமூகத்தில் இருந்து ஒடுக்குவதற்கு அரசுத் தலைவர் அநுரகுமாரதிசாநாயக்கவினால் முடிந்துள்ளது. இதற்காக நாம் அவருக்கு பாராட்டுக்களை தெரிவிக்கிறோம்.

எமது நாட்டுக்கு புதிய ஆரம்பம் ஒன்று தேவைப்படுகிறது என்பதை நாம் அறிவோம். மத மற்றும் கலாசார பெறுமதிகளையும், சாந்தி மற்றும் சமாதானத்தையும் பாதுகாத்து எமது நாட்டை சௌபாக்கியம் மிக்க நாடாக மாற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படு அவரிடத்தில் கோரிக்கை விடுக்கிறோம்.

இந்த விடயத்தில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச அமைப்புகள் முன்வைக்கும் வியடங்களை பின்பற்றுவதை விட, எமது நாட்டில் அன்றாட தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாத மக்களின் வாழக்கைச்செலவை குறைப்பதற்கும் நாட்டின் விவசாயம், மீன்பிடி மற்றும் தொழிற்றுறைகளை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

நாட்டில் இடம்பெற்ற காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள், மனிதப்படுகொலைகள், பாதாள உலக செயற்பாடுகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உள்ளிட்ட பயங்கரவாத செயற்பாடுகள், நாட்டை கடன் சுமைக்கு தள்ளிய ஊழல் செயற்பாடுகள் கண்டறியப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கு தண்டனைபெற்றுக்கொடுக்கப்படவேண்டும். அதேபோன்று எதிர்காலத்தில் அத்தகைய நிலைமைகள் ஏற்படாமல் இருக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம்.

உயிர்த்தஞாயிறுதினத்தாக்குதல்தொடர்பில் உண்மைகளைவெளிக்கொணருவதாகஅரசுத் தலைவர் எமக்கு அளித்த வாக்குறுதியை விரைவாக நிறைவேற்றுமாறு கோரிக்கை விடுக்கிறோம். மேலும் இந்த விடயம் தொடர்பில் ஆர்யுமாறு நியமிக்கப்பட்ட அரசுத் தலைவர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு வினயமாக கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## டிஜிட்டல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(Data encryption) போன்ற சகல இலத்திரனியல் சேவைத்துறைகள் மீதும் இது விதிக்கப்பட்டிருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்தத்துறையில் இலட்சக்கணக்கானோர் தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டுவருகின்றனர். இளைய தலைமுறையினர் உட்பட பல்வேறு தரப்பினர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இளம் தலைமுறையினர், நடுத்தர வருமானம் ஈட்டும் தலைமுறையினர் மீதான அடியாக இதை கருத முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் பிரகாரமே இந்தப் பெறுமதி சேர் வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆளும்தரப்பு இதனை மூடி மறைத்து வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சர்வதேசநாணயநிதியத்தின் ஒப்பந்தத்தை மாற்றுவோம் என ஆளும்தரப்பு முன்னர் பிரஸ்தாபித்தது. என்றாலும் அதிகாரத்துக்கு வந்த பின்னர் எந்தவித மாற்றங்களையும் இதில் மேற்கொள்ளாமல், இந்த வரிகளைத் தொடர்ந்தும் விதித்து வருகிறது.

டிஜிட்டல் சேவைத்துறைகளை நம்பி வாழ்க்கை நடத்திவரும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள், தொழில் முனைவோர் மீது இந்த வரிகளை விதிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

## இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

நாட்டைச்சுற்றிகடல்இருக்கும்நிலைமையில் உப்பை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கதைக்கின்றோம். இது வெட்கமானது. பால், தேங்காய் பால், அரிசி என்பனவற்றை இறக்குமதி செய்வதுடன், இப்போது உப்பை கொண்டு வருவது தொடர்பிலும் பேச வேண்டிய நிலைமை உள்ளது.

இப்போது தேசிய பாதுகாப்பு தொடர்பில் எதனையும் கூற முடியாத நிலைமையே உள்ளது. முதலில் மக்களின் பாதுகாப்பு அவசியமானது. அந்தப் பாதுகாப்பு இல்லாமலே உள்ளது. நீதிமன்றத்திற்குள் துப்பாக்கி சூட்டை நடத்திய இஷாரா செவ்வந்தி என்ற பெண் இன்னும் நாட்டுக்குள்ளேயே இருப்பதாக அண்மையில் ஊடக நிகழ்ச்சியொன்றில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார். அப்படியென்றால் அந்தப் பெண்ணை ஏன் கைது செய்ய முடியவில்லை. இதுவொரு சிறிய நாடு, பொலிஸ்மா அதிபரையே பிடிக்க முடியுமென்றால், பிரபாகரன் இருந்த இடத்தையே கண்டுபிடிக்க முடியுமென்றால் ஏன் இஷாரா செவ்வந்தியை கண்டுபிடிக்க முடியவில்லை. முடிந்தால் ஒரு மாத காலத்திற்குள் அவரை பிடித்துக்காட்டுங்கள் என்று கோருகின்றோம். அந்த சம்பவத்தில் 12 பேரை கைது செய்துள்ளதாக கூறினாலும் அதன் பிரதான சூத்திரதாரியை பிடிக்க முடியவில்லை.

இப்போது பொதுமக்களின் பாதுகாப்பு டுபாயில் இருந்தே வழிநடத்தப்படுகிறது. அங்கிருந்து தொலைபேசி மூலம் கொலைகளை நடத்துகின்றனர். இறுதியில் அனைவருக்கும் டுபாயில் போய் இருக்கவே வேண்டிவரும். இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் அமெரிக்கா அரசுத் தலைவர் யினால் அறிவிடப்பட்ட வரி அவ்வேறே இலங்கையில் செயற்படுத்தப்பட்டால் நிலைமை என்னவாகும். இங்குள்ள ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படும் நிலைமை ஏற்படும். இதனால் இதனை குறைக்க நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இதேவேளை மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் அண்மையில் இலங்கைவந்தார். அவர் வடக்கிற்கும் சென்றார். ஆனால் இங்கே யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகின்றன. இப்போது காசாவில் சிறுவர்கள் கொல்லப்படுகின்றனர். வைத்தியசாலைகள் இல்லை. உணவு இன்றி மக்கள் இருக்கின்றனர். அங்கே போகாது யுத்தம் முடிவடைந்த எமது சிறிய நாட்டுக்குள் வந்து எமது ஆடைகளுக்குள்ளேயே நுழைகிறார். அத்துடன் வடகொரியா அணுவாயுதங்களை தயாரிக்கின்றது. அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேநேரம் ஈரானின் அணுவாயுதம் உள்ளதா என்றும் தெரியாது ஆனால் அந்த நாட்டின் மீது தாக்குதல்களை நடத்துகின்றனர். இது நியாயமானதா என கேட்கிறேன் என்றார்.

## தவறு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அன்று நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்தவர்களே இன்று நல்லவர்கள் போல் நடிக்கின்றார்கள். சிறையில் இருக்க வேண்டியவர்கள் இன்று நாடாளுமன்றத்தில் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் குழப்புகின்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது வேடிக்கையானது.

உள்நாட்டில் ஏற்பட்ட உப்புத் தட்டுப்பாடு தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எமது நாடு நான்கு பக்கமும் கடலில் சூழப்பட்ட தீவு என்பதால் கடந்த காலங்களில் எமது நாட்டுக்கு தேவையான உப்பு இங்கு உற்பத்தி செய்யப்பட்டது. அது மக்களின் மொத்த தேவையையும் பூர்த்தி செய்தது. எனினும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நிலவிய காலநிலை காரணமாக இங்கு உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனையடுத்து உப்பு இறக்குமதிக்காக விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டு உப்பு இறக்குமதிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

தொடர்ச்சி 5ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விபத்துகளுக்கு தீர்வாக புதிய வழிமுறைகள் அவசியம்

இலங்கையில் ஆண்டுதோறும் 10,000 முதல் 12,000 இறப்புகள் விபத்துகள் மற்றும் இயற்கையானது அல்லாத காரணங்களால் ஏற்படுகின்றன என்பது ஒரு சோகமான உண்மை. இந்த எண்ணிக்கை சிறியதல்ல; அது ஒரு சிறிய நகரமெங்கும் ஒரே ஆண்டில் அழிந்துவிடும் அளவுக்கு சமமாகும். இத்தகைய நிலை ஒரு சமூகத்தின் பாதுகாப்புத் தரத்தைப் பற்றி கேள்விகள் எழுப்பும் வகையில் உள்ளது.

இவற்றில் பெரும்பாலானவை சாலை விபத்துகள், தொழில்துறைப் பிழைகள், விழ்ச்சிகள், மின்சாரக்கொடுமைகள், தீப்பற்றல்கள், வீதிகளில் மரங்களால் சிக்கல் ஏற்படும் போன்ற செயற்கை காரணிகளால் ஏற்படுகின்றன. இவற்றை முற்றாக தடுப்பது சாத்தியமில்லை எனினும், மிகப்பெரும் பகுதியை கட்டுப்படுத்துவது நிர்வாகத்திற்கும் சமூகத்திற்கும் பெரும் கடமையாக இருக்கின்றது.

ஆளும்தரப்பு விபத்துகளைத் தடுக்கத் தனியான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கிறது. ஆனால், அதன் விளைவுகள் சாதகபாட்டைக் காணமுடியவில்லை. பல சந்தர்ப்பங்களில் இது போலியான அறிவிப்புகளாகவே முடிகின்றன. உண்மையில், ஒரு கட்டமைக்கப்பட்ட, தரமான, சீரான திட்டமிடலே இத்தகைய உயிரிழப்புகளைத் தடுக்க முடியும்.

முதன்மையாக, சாரதிகள் மற்றும் போக்குவரத்து ஊழியர்களின் தரத்தை மேம்படுத்துவது மிக அவசியம். தற்போது இலங்கையில் வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான நடைமுறை தளர்வாகவும், தொழில்முறை நேர்த்தி இல்லாமலும் நடைபெறுகின்றன. ஒரு சாரதி வாகன ஓட்ட அனுமதிப்பத்திரம் பெறும்போது, அவரது மனநிலை, விசாரணைத்திறன், அவசரநிலை முகாமை திறன் ஆகியவை சரியாகச் சோதிக்கப்படுவதில்லை. இது பயணிகளின் உயிரைப் பணயம் வைக்கும் நிலையை உருவாக்குகிறது.

மேலும், விபத்துகளைக் கண்காணிக்கும் நவீன தொழில்நுட்பங்களும் தேவை. சாலைப் பாதுகாப்பு கேமராக்கள், வேகக் கட்டுப்பாட்டு கருவிகள், போக்குவரத்து ஒழுங்கு தகவல் மையங்கள் போன்றவை பெரும்பாலான மேம்பட்ட நாடுகளில் பயன்படுகின்றன. இலங்கையிலும் இவை விரைவில் அறிமுகமாக வேண்டும். குறிப்பாக, முக்கிய வீதிகள், இரவுப்பயண வழிகள், மற்றும் பள்ளி அருகிலுள்ள இடங்களில் இந்த சாதனங்களை பயன்படுத்துவது அவசியம்.

சாலை கட்டமைப்புகளும் இன்றைய தேவைகளுக்கேற்ப திருத்தப்படவேண்டும். மோசமான சாலை நிலை, போதிய அடையாளக் குறிகள் இல்லாமை, வெளிச்ச வசதி குறைபாடு, மற்றும் மேம்பாலங்கள் மற்றும் மோசமான மூலைவளைவுகள் போன்றவைகூட விபத்துகளுக்கு வழிவகுக்கின்றன.

இதற்கிடையில், மக்கள் விழிப்புணர்வும் மிக முக்கியமானதாகும். கல்விநிலையங்களிலும் ஊடகங்களிலும் ஒவ்வொரு குழுமகனுக்கும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும். இளைஞர்களிடம் இரு சக்கர வாகனங்களில் கவனக்குறைவான ஓட்டம், மது அருந்தியபின் வாகன ஓட்டம் போன்றவை பற்றிய தீவிரமான விளக்கங்கள் வழங்கப்படவேண்டும்.

முடிவில், சட்டத்தின் அமலாக்கம் முறையாக செய்யப்படவேண்டும். சாரதிகள் மீது விதிக்கப்பட்ட தண்டனைகள் பல நேரங்களில் செயல் க்கப்படாமல் முடிகின்றன. அவசர ஓட்டம், மோட்டார் சைக்கிள்களில் ஹெல்மட் இல்லாமை, குழந்தைகளை பாதுகாப்பின்றி பயணிக்க வைப்பது போன்றவற்றில் கடுமையான சட்ட நடவடிக்கைகள் அவசியம். இதில் பொதுமக்களின் பாதுகாப்பே முதன்மையாக இருக்க வேண்டும்.

இன்றைய உலகில் தொழில்நுட்ப வளர்ச்சி பெரிதாக உயர்ந்திருக்கும் போதும், ஒரு நாட்டில் வருடாந்தம் 10,000க்கும் மேற்பட்ட உயிர்கள் இழப்படுவது ஒரு சமூகப் பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது. இது சீரான நடவடிக்கைகள் மூலம் மாற்றப்பட வேண்டிய அவசியமான விடயம். விபத்துகள் தவிர்க்கப்படலாம் என்ற உண்மை உணர்த்தப்பட வேண்டியது இன்று காலத்தின் கட்டாயம்.

உயிரின் மதிப்பை உணர்ந்து, அரசு, தனியார், சமூக அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்படவேண்டிய நேரமிது. வார்த்தைகளுக்குப் பதிலாக செயல்கள் மூலம் உயிர்கள் காக்கப்படவேண்டும்.

# பெருந்தோட்ட தொழிலாளருக்கு சம்பளம் ரூபா 1300 மட்டுமே

## ரூ. 1700 என்பது ஏமாற்று என்கிறார் இராதாகிருஷ்ணன் எம்.பி.



நாட்டில் பற்றாக்குறை இருக்கும்வரை நாட்டை அபிவிருத்தி செய்வது கஷ்டமான விடயமாகும். அதனால் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகளை ஆளும்தரப்பு மேற்கொள்ள வேண்டும். ஆட்சிக்கு வரும் ஆளும்தரப்புக்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா வழங்குவதாக தெரிவிக்கிறார்கள். ஆனால் இதுவரை 1300 ரூபாவுக்கு மேல் சம்பளம் வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 3857 பில்லியன் என்பதுடன் இறக்குமதி வருமானம் 5685 பில்லியன் பற்றாக்குறையாக இருப்பது 1828 பில்லியனாகும். நாங்கள் ஏற்றுமதியைவிட இறக்குமதிக்கு அதிக முன்னுரிமை வழங்குகிறோம். அதிகமான உணவுப்பொருட்கள் இறக்குமதி செய்யும் நிலையே காணப்படுகிறது.

இந்த விடயத்தில் அரசாங்கங்கள் ஒரு திட்டமிடல் இல்லாமல் செயற்பட்டு வந்ததாலே இவ்வாறு இறக்குமதி செய்யப்படுகிறது. எமது நாட்டில் இரண்டுவிதமான பற்றாக்குறைகள் இருந்து வருகின்றன. ஏற்றுமதி, இறக்குமதியிலும் பற்றாக்குறை இருக்கிறது.

அதேபோன்று வரவு செலவு திட்டத்திலும் பற்றாக்குறை இடம்பெற்று வருகிறது. இவ்வாறு பற்றாக்குறை இருந்துவரும் பட்சத்தில் நாட்டை அபிவிருத்தி செய்வது மிகவும் கஷ்டமான விடயமாகும். அதனால் இந்த பற்றாக்குறையை நீக்குவதற்கு தேவையான விடயங்கள் என்ன என்பதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் அரசாங்கங்களில் ஊழல் மோசடிகள் இருந்தமையால் இந்த பற்றாக்குறை இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது. தற்போது அவ்வாறான எதவும் இல்லை. அதனால் இந்த பற்றாக்குறையை நீக்குவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்கு அரசாங்கத்துக்கு நல்ல முகாமைத்துவம் இருக்க வேண்டும். ஆனால் இன்று அரச அதிகாரிகள் பணியாற்றுவதற்கு அச்சப்படுகின்றனர். ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அவர்களுக்கு சிறைக்கு செல்ல வேண்டி ஏற்படும் என அச்சப்படுகின்றனர். அதனால் அவர்கள் துணிந்து செயற்படுவதற்கு முடியுமான அதிகாரத்தையும் அவர்களுக்கும் வழங்க வேண்டும்.

மேலும் ஈரான் இஸ்ரேல் மோதல் காரணமாக எமது தேயிலை ஏற்றுமதிக்கு தடங்கல் ஏற்பட்டுள்ளன. அதேபோன்று ஏற்றுமதியில் இரண்டாம் இடத்தில் இருப்பது ஆடை உற்பத்தியாகும். ஆனால் இன்று அமெரிக்காவின் வரி அதிகரிப்பால் ஆடை உற்பத்தி தளம் பல நிலைக்கு சென்றுள்ளது.

அமெரிக்காவின் வரி அதிகரிப்பு தொடர்பில் ஆளும்தரப்பு பேசியிருப்பதாக தெரிவிக்கப்பட்டாலும் அது தொடர்பில் இதுவரை எந்த பிரதிபலிப்பையும் காணவில்லை என்றே தெரிவிக்க வேண்டி இருக்கிறது.

அமெரிக்காவின் வரி விதிப்பு 44 வீதம் தான் என அறிவிக்கப்பட்டால் எமது நாட்டின் ஆடைத்தொழிற்சாலைகளுக்கு என்னவாகும் என்பது கேள்விக்குரியாகும். அதனால் நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறுப்புவாய்ந்த அரசாங்கமாக இந்த ஆளும்தரப்பு திகழவேண்டும்.

தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்பட்டால் அந்த தொழிலில் இருப்பவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு முகம்கொடுக்கவேண்டிவரும். அவர்களுக்கு போதுமான சம்பளம் இல்லை. ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் 1700 ரூபா வழங்குவதாக தெரிவிக்கிறார்கள்.

ஆனால் இதுவரை 1300 ரூபாவுக்கு மேல் சம்பளம் வழங்கப்படவில்லை. அதனால் தோட்ட மக்களின் சம்பளத்தை அதிகரித்துக்கொடுக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது அடிப்படை பொருட்களின் விலை அதிகரிப்பால், அவர்களின் வாழ்க்கைச்செலவை கொண்டுசெல்ல 1700 ரூபாவும் போதுமானதாக இல்லை.

மேலும் ஆளும்தரப்பு வாகன இறக்குமதி செய்ய ஆரம்பித்துள்ளதால் டொலர் இல்லாமல் போகும் என சிலர் தெரிவிக்கின்றனர். டொலருக்கு பற்றாக்குறை ஏற்பட்டதால் கடந்த காலங்களில் எமக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்களையாவது இறக்குமதி செய்ய முடியாமல் போனது அந்த நேரத்தில் இந்தியாவே எமக்கு உதவி செய்து, 4 பில்லியன் ரூபா வழங்கி எமக்கு உதவி செய்தது. அதனால் மீண்டும் அவ்வாறானதொரு நிலைமையை ஏற்படுத்திவிடாமல் ஆளும்தரப்பு பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும் எமது விவசாயிகள் இன்று பல்வேறு துன்பங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக கிழங்கு, வெங்காயம், அரிசி உற்பத்தி செய்யப்பட்டு அறுவடை செய்யும்போது ஆளும்தரப்பு அந்த பொருட்களை இறக்குமதி செய்கிறது.

இதனால் எமது விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இதனை ஆளும்தரப்பு உணர்வதில்லை. நுகர்வோருக்கு குறைந்த விலைக்கு வழங்குவதற்கு இவ்வாறு செய்வதாக தெரிவித்து, உள்ளூர் விவசாயம் பாதிக்கப்பட்டால் எதிர்காலத்தில் அனைத்து பொருட்களும் இறக்குதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்பதை ஆளும்தரப்பு புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## தவறு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் இந்த உப்புத் தட்டுப்பாட்டை வைத்து எதிர்க்கட்சியினர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். வருடம் ஒன்றிற்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் தொன் உப்பு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.எனினும் நாட்டின் தேவைக்கு இரண்டு இலட்சம் தொன் உப்பு தேவைப்படுகிறது.வீட்டு சமையல் மற்றும் கைத்தொழில் துறை தேவைகளுக்காக உப்பு பயன்படுத்தப்படுகிறது. அதனை அடிப்படையாகக் கொண்டே உப்பை இறக்குமதி செய்யும் தேவை ஏற்பட்டது.

எனினும் இந்த உப்புத் தட்டுப்பாட்டை தேசிய மக்கள் சக்தி அரசாங்கமே ஏற்படுத்தியது என எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டி கருத்துக்களை தெரிவித்தார்கள். முதலில் அரிசி தட்டுப்பாடு, பின்பு தேங்காய் தட்டுப்பாடு என சகல தட்டுப்பாடுகளுக்கும் அவர்கள் தற்போதைய அரசாங்கத்தையே குற்றம் கூறிவருகின்றார்கள். உப்பைத்தின்றவன் தண்ணீர் குடிப்பான் தப்பு செய்தவன் தண்டனை பெறுவான் என்ற வகையில் தப்பு செய்த எவரும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பிடமிருந்து ஒருபோதும் தப்ப முடியாது. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பது போல் தற்போது மக்கள் செல்வாக்கு இல்லாத எதிர்க்கட்சியும் குப்பைக்கு சமமான நிலையிலேயே உள்ளது. அவர்களின் கூற்றுக்களை நாட்டு மக்கள் தற்போது கண்டுகொள்வதில்லை.

கடந்த காலங்களில் சரியான திட்டங்கள் இவர்களிடம் காணப்படவில்லை. நாட்டுக்குத் தேவையானதை திட்டமிட்டு செய்யத் தவறியதாலேயே நாட்டில் தட்டுப்பாடுகள் ஏற்படுவதற்கு காரணமாயின.

எமது நாட்டில் புத்தளம் ஆனையிறவு ஹம்பாந்தோட்டை, மன்னார் போன்ற பகுதிகளிலேயே பிரதான உப்பளங்கள் காணப்படுகின்றன. இங்கு இன்னும் கூட பாரம்பரிய முறையில் தான் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

எமது அரசாங்கமே தற்போது ஆனையிறவில் நவீன முறையில் உப்பு உற்பத்தியை முன்னெடுக்கின்றது. அந்த வகையில் நாட்டில் தற்போது தட்டுப்பாடு இன்றி சதொச ஊடாக தேவையான அளவு உப்பு விற்பனை செய்யப்படுகிறது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# கிழக்கு கொள்கலன் முகாமைக்கு புதிய கம்பனியை நிறுவ தீர்மானம்

கிழக்கு கொள்கலன் முனைய முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாடுகளுக்கு பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றைநிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றையதினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு தெற்கு துறைமுக கருத்திட்டம் - கிழக்கு கொள்கலன் முனையம் மற்றும் மேற்கு கொள்கலன் முனைய அபிவிருத்திக்காக 2021.02.01 திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. கிழக்கு கொள்கலன் முனைய முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாடுகளுக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு முழு உரித்துடைய பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றைநிறுவுவதற்கு இலங்கைதுறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்மூலம், உயர்ந்தபட்ச பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், தொழிற்பாட்டு வினைத்திறனை அடைவதற்கும் இயலுமை கிடைக்கும். அதற்கமைய, 'வரையறுக்கப்பட்ட கொழும்பு கிழக்கு கொள்கலன் முனைய (தனியார்) கம்பனி' எனும் பெயரில் கம்பனியொன்றை நிறுவுவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

## பாகிஸ்தான் தூதுவர் நேற்று அமைச்சர் நளிந்தவுடன் சந்திப்பு

இலங்கைக்கானபாகிஸ்தான்உயர்ஆணையர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஃபஹீம் உல் அஜீஸ் எச்.ஐ (எம்) (னிழிஸ்ரீலிஷ றூளஜளஷழியி (யூளமி-) ய்ழிஜ¬ளளது ஷீயி புகுஷ்கு ஷிஞூ (னி)) நேற்று (07) சுகாதார அமைச்சில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவை சந்தித்தார்.

நீண்டகால சமூக, பொருளாதார, கல்வி, விளையாட்டு மற்றும் அரசியல் உறவுகள், சுகாதாரம், சுதேச மருத்துவம் அத்துடன் சுற்றுலா மற்றும் மருத்துவ சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளின் எதிர்கால வளர்ச்சி குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இரு நாடுகளின் கலாச்சார விடயங்களை உள்ளடக்கிய ஊடக நிகழ்ச்சிகளின் பரிமாற்றம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களை பரிமாறிக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நல் உறவை மேலும் மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இரு தரப்பினரும் கவனம் செலுத்தினர்.

பாகிஸ்தான் ஆளும்தரப்பு இலங்கைக்கு உறுதியான ஆதரவை வழங்கும் என்று பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் உறுதியளித்தார். கல்வித் துறையில் இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் ஒத்துழைப்பு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது, மேலும் தற்போது பாகிஸ்தானில் உள்ள இலங்கை மாணவர்களுக்கு மருத்துவக் கல்விக்காக உதவித்தொகை வழங்கப்படுகிறது, மேலும் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வித் துறைகளுக்கு இடையே தற்போதுள்ள ஒத்துழைப்பை மேம்படுத்துவது மற்றும் தொழிற்கல்வித் துறையில் மாணவர்களுக்கு சிறந்த தொழிற்கல்வி பயிற்சியை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. மேலும் விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இந்தச் சந்திப்பின் போது இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வலுவான உறவு மேலும் உறுதிப்படுத்தப்பட்டது,

இந்த நிகழ்வில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத் துறை துணை அமைச்சர் டாக்டர் ஹன்சகா விஜேமுனி, சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்க மற்றும் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கையில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.07.2025இல் வெளியிடப்பெற்றது